අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/09/12/16/01/01-2023/2025

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2026.05. 26

சுற்றுநிருப இலக்கம்: 19/2026

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டங்களுக்குப் பொறுப்பான அனைத்து பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
தொழினுட்பவியல் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் அனைத்துப் பாடசாலைகளினதும் அதிபர்களுக்கும்

## தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டம் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம்

மஹிந்தோதய புலமைப்பரிசில் திட்டம் தொடர்பான 30.06.2014 திகதியிட்ட 23/2014 இலக்கச் சுற்றுநிருபம் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம் தொடர்பான 03.07.2014 திகதியிட்ட 22/2014 இலக்கச் சுற்றுநிருபம் ஆகியன இத்தால் இரத்து செய்யப்படுவதுடன், தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டம் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம் தொடர்பாக வெளியிடப்படும் இச் சுற்றுநிருபம் இனிமேல் வலுவில் இருக்கும்.

க.பொ.த (சாதாரண தர) பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த (உயர்தர) தொழினுட்பவியல் பாடத்துறையை கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் நிதி ரீதியான சிரமங்களை நிவர்த்தி செய்வதற்காகவும், பிள்ளைகள் எவ்வித தடையுமின்றி தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும், தொழினுட்பவியல் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டங்களின் ஊடாகத் தெரிவு செய்யப்படும் புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு உரிய 02 வருட காலப்பகுதிக்குள் 20 தவணைகளைக் கொண்ட புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப்படும்.

2. புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள்

2.1. தொழினுட்பவியல் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள்

2.1.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

2.1.2. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்து, க.பொ.த (உயர்தர) தொழினுட்பவியல் பாடத்துறையையில் கற்கும் மாணவ, மாணவிகளாக இருத்தல் வேண்டும்

2.1.3. விண்ணப்பங்கள் கோரப்படும் ஆண்டின் ஜூலை மாதம் 31 ஆம் திகதியன்று 16 வயதிற்கு குறையாதவராகவும் 18 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

2.1.4. குடும்பத்தின் வருடாந்த வருமானம் ரூபா 360,000/- அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும். (சமுர்த்தி நிதியுதவிக் கொடுப்பனவுகள் இந்த வருமான எல்லைக்குள் கணக்கிடப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது).

2.2. சுஜாத தியணி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள்

2.2.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

2.2.2. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்து, க.பொ.த (உயர்தர) தொழினுட்பவியல் பாடத்துறையயில் கற்கும் மாணவிகளாக இருத்தல் வேண்டும்

2.2.3. விண்ணப்பங்கள் கோரப்படும் ஆண்டின் ஜூலை மாதம் 31 ஆம் திகதியன்று 16 வயதிற்கு குறையாதவராகவும் 18 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

2.2.4. குடும்பத்தின் வருடாந்த வருமானம் ரூபா 360,000/- அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும். (சமுர்த்தி நிதியுதவிக் கொடுப்பனவுகள் இந்த வருமான எல்லைக்குள் கணக்கிடப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது)

3. புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பித்தல்

3.1 தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டம் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம் என்பவற்றிற்காக, க.பொ.த. (உயர்தர) தொழினுட்பவியல் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின் அதிபர்களுக்கு, வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் குறித்த காலப்பகுதிக்குள் இச் சுற்றுநிருபத்தின் உப அட்டவணை 01 இன் படி விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட வேண்டும் (தொழினுட்பவியல் பாடத்துறைக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர் செப்டம்பர் மாதத்தின் முதல் வாரத்திற்குள்).

3.2 அவ்வாறு விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள், குறித்த புலமைப்பரிசிலுக்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர், மாணவர்களினால் பூர்த்தி செய்யப்பட்டு, அதிபரின் உறுதிப்படுத்தல் மற்றும் மாணவன்/மாணவி வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரினால் குறிப்பிட்ட வருமான எல்லைக்குள் உட்பட்டவர் என வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ் ஆகியவற்றுடன் அதிபர் ஊடாக, விண்ணப்பிக்கும் ஆண்டின் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பாடசாலை அமைந்துள்ள வலயக் கல்விப் பணிப்பாளருக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3.3 வலயக் கல்விப் பணிப்பாளர் தமக்குக் கிடைக்கும் அனைத்து விண்ணப்பங்களையும் கோவைப்படுத்தி, மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு உரிய ஆண்டின் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்தல்

4.1 அ) க.பொ.த (உயர்தரம்) தொழினுட்பவியல் பாடத்துறையைக் கற்பதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்து, தொழினுட்பவியல் பாடத்துறையயில் கற்கும் மாணவர்களுள், குடும்பத்தின் வருடாந்த வருமானம் ரூபா 360,000/- அல்லது அதற்குக் குறைவாகக் காணப்படும் குடும்பங்களிலிருந்து முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படும் வகையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

4.2 அ) தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டத்திற்காக 700 மாணவ, மாணவிகளும், சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டத்திற்காக 250 மாணவிகளும் என்ற அடிப்படையில் புலமைப்பரிசில் பெறுநர்கள் தெரிவு செய்யப்படுவர்.

ஆ) குறித்த புலமைப்பரிசில் பெறுநர்களின் எண்ணிக்கை 25 மாவட்டங்களுக்கும் விகிதாசார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். அதற்கமைய, ஒரு மாவட்டத்திற்கு தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 28 மாணவ, மாணவிகள் வீதமும்,

சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்திலிருந்து 10 மாணவிகள் வீதமும் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இ) எனினும், ஏதேனும் ஒரு மாகாணத்திற்குட்பட்ட மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட புலமைப்பரிசில் எண்ணிக்கைக்குரிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்திலோ அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் இல்லாத சந்தர்ப்பத்திலோ பின்வருமாறு செயற்பட வேண்டும்:

- ஏதேனும் ஒரு மாகாணத்திற்குட்பட்ட மாவட்டத்திற்குப் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து, அம் மாகாணத்தைச் சேர்ந்த வேறொரு மாவட்டத்தில் மேலதிக விண்ணப்பங்கள் இருப்பின், அவற்றைக் குறைபாடு நிலவும் மாவட்டத்திற்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஈ) மாணவி ஒருவருக்கு தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டம் அல்லது சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒரு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மாத்திரமே நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் காணப்படும்.

4.3 அ) மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டம் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம் என்பவற்றிற்காகப் புலமைப்பரிசில் பெறுநர்களைத் தெரிவு செய்வதற்கென மூன்று உத்தியோகத்தர்களைக் கொண்ட தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். அக்குழுவினால் உப அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் புள்ளி வழங்கும் நடைமுறையின் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்டு (இங்கு அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 10 மாணவிகள் சுஜாத தியணி புலமைப் பரிசிலுக்காகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரே, தொழினுட்பவியல் புலமைப்பரிசிலுக்கான மாணவ, மாணவிகள் தெரிவு செய்யப்பட வேண்டும்), அப் புள்ளிகளின் ஒழுங்குவரிசைக்கு அமைய மாவட்ட மட்டத்தில் தகுதி பெறும் மாணவர் பெயர்ப் பட்டியல் உப அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன், மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப் பட்டியல், கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதிக்காக உரிய ஆண்டின் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கல்விப் பணிப்பாளருக்கு (பாடசாலைச் செயற்பாடுகள்) அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

05. புலமைப்பரிசில் வழங்குதல்

5.1 ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 750/- வீதம், க.பொ.த (உயர்தரம்) வகுப்பில் கல்வி கற்கும் 20 மாத காலப்பகுதிக்காக இப்புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப்படும். இப்புலமைப்பரிசில் தொகை, மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மித்த மக்கள் வங்கி அல்லது இலங்கை வங்கி கிளையொன்றில் புலமைப்பரிசில் பெறுநரின் பெயரில் ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்கில் ஒரே தடவையில் வைப்பிலிடப்படும். குறித்த கணக்கு இலக்கம் மற்றும் வங்கி கிளை அலுவலகம் தொடர்பான விபரங்கள் பாடசாலை அதிபரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5.2 வலயக் கல்விப் பணிப்பாளரினால் உரிய வங்கிக் கணக்கு விபரங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5.3 மேலே 4.3 இன் படி தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், புலமைப்பரிசில் நிதியுதவிகளை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் எதிர்வரும் ஆண்டில் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு விடுவிக்கப்படும் என்பதுடன், மாகாணக் கல்விப்

பணிப்பாளர்களினால் குறித்த நிதியுதவிகள் உரிய மாணவர்களின் வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தப்பட வேண்டும்.

06. புலமைப்பரிசில் இரத்துச் செய்யப்படல்

6.1 பின்வரும் சந்தர்ப்பங்கள் குறித்து ஆராய்ந்த பின்னர், மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களை இரத்துச் செய்யும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்குக் காணப்படுகின்றது.

- புலமைப் பரிசில்தாரர் ஒழுக்க விரோத நடத்தைகளில் ஈடுபட்டமையால் தண்டனைக்கு உள்ளாகுதல்.
- தொடர்ச்சியாக பாடசாலைக்கு வருகை தராமை
- தொடர்ச்சியான கல்விச் செயற்பாடுகளிலிருந்து விலகுதல்.
- க.பொ.த (உ.த) கல்வியை நிறைவு செய்யாமல் பாடசாலையிலிருந்து விலகுதல்.

மகாத்மா காந்தி அல்லது டயலொக் புலமைப்பரிசில் திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறும் மாணவ, மாணவிகள் எவரேனும் இருப்பின், அவர்கள் தொழினுட்பவியல் புலமைப்பரிசில் திட்டம் மற்றும் சுஜாத தியணி புலமைப்பரிசில் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியவற்றவராவர்.

நாலக களுவெவ
செயலாளர்

# தொழில்நுட்பவியல் பாடத்துறையில் கற்கும் குறைந்த வருமானம் பெறும் மாணவ, மாணவிகளுக்காக வழங்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் சுஜாத தியணி புலமைப் பரிசில் விண்ணப்பப் படிவம்

கல்வியாண்டு:- 2024/2026

1. மாணவன்/மாணவியின் முழுப் பெய:-

2. 2.1 தனிப்பட்ட முகவரி:-

 2.2 தொலைபேசி இல:- நிலையான: கையடக்கத் தொலைபேசி:

3. பிறந்த திகதி:- 4. ஆண்/ பெண் பால்நிலை:-

5. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை பற்றிய விபரங்கள்:-

 5.1 முதன்முறையாகக் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றிய வருடம்:-
 (உரிய கல்வியாண்டிற்கு எதிரே √ அடையாளமிடுக)
 2024 ☐ 2025 ☐

 5.2 க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் (கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடவும்.)

வருடம் - பரீட்சை சுட்டெண் - பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை-

| தொடர் இல | பாடம் | பெற்ற சித்தி | |
|---|---|---|---|
| | | தேசிய மட்ட பரீட்சை | பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடு |
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |

6. க.பொ.த. (உயர் தரம்) பற்றிய விபரங்கள்:-

 6.1 க.பொ.த. (உயர் தரம்) கல்வி கற்கும் பாடசாலை :-

 6.2 அப்பாடாசாலை அமைந்துள்ள மாகாணமும் மாவட்டமும் :-

 6.3 க.பொ.த. (உயர் தரம்) கற்கும் பாடத்துறை:-

 6.4 க.பொ.த. (உயர் தரம்) தற்போது கல்வி கற்கும் தரம்:-
 (தரம் 12 அல்லது தரம் 13 என்பதாக)

 6.5 மேலே 6.3 இன் கீழ் கற்கின்ற பாடங்கள்:-
 1.
 2.
 3.

அ.ப.ப.

7. குடும்ப விபரங்கள்:-

7.1 தந்தை/சட்டபூர்வமான பாதுகாவலரின் பெயர்:-
தொழில்:-

7.2 தாயின் பெயர்:-
தொழில்:-

8. பெற்றோரின் வருடாந்த வருமானம்:-

9. மாணவன்/மாணவி தற்போது வேறு ஏதேனும் புலமைப் பரிசில் நிதி உதவிகளை பெறுகின்றாராயின் அது பற்றிய விபரங்கள்:-

..........................................................................................................................................

10. மாணவன்/மாணவிக்கு இலங்கை வங்கி/மக்கள் வங்கிக் கணக்கு (**வயதுடையவர்களுக்கான /செயலிலுள்ள கணக்கு**) காணப்படின் அல்லது அவ்வாறு இல்லாவிடின் புதிய கணக்கொன்றை ஆரம்பித்து அக்கணக்கின்,

கணக்கு இலக்கம்:..................... வங்கிக் கிளையின் பெயரும் இலக்கமும்: ..............................

(அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட, வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முகப்புப் பக்கத்தின் நிழற்படப் பிரதியொன்று இணைக்கப்பட வேண்டும்.)

என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும், கல்வி அமைச்சினால் புலமைப் பரிசில் ஒன்றை வழங்குவதற்காக நான் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், குறித்த புலமைப் பரிசிலுக்குரிய சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதாகவும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

..................................................... ....................................................

திகதி மாணவன்/மாணவியின் கையொப்பம்

<u>க.பொ.த. (உயர் தரம்) கற்கும் பாடசாலை அதிபரின் பரிந்துரை:</u>

.............................................................................. எனும் மாணவன்/மாணவி .................. தரத்திலிருந்து இப்பாடசாலையில் கல்வி கற்கின்றார் என்பதையும், க.பொ.த. (உயர் தரம்) தொழில்நுட்பவியல் பாடத்துறையைக் கற்பதற்காக ........................................................... வித்தியாலயத்திலிருந்து இப்பாடசாலைக்கு வருகை தந்துள்ளார் என்பதையும், அவர் நற்பண்புகளுடைய மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுகின்ற ஒருவர் என்பதனாலும் மேற்படி புலமைப் பரிசிலுக்காக பரிந்துரைக்கின்றேன்

..................................................... ....................................................

திகதி அதிபரின் பெயரும் கையொப்பமும்

பாடசாலையின் தொலைபேசி இலக்கம்:-

<u>கிராம அலுவலரின் சான்றிதழ்</u>

.................................. வித்தியாலய அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட, மேலே பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டுள்ள மாணவன்/மாணவியின் ................................ ஆம் திகதி வரையிலான தாய்/தந்தை/பாதுகாவலரின் வருடாந்த வருமானத்தைப் பரிசோதித்து, மேற்படி தொடர் இலக்கம் 8 இன் படி குறைந்த வருமானம் பெறும் பிரிவைச் சேர்ந்தவர் எனச் உறுதியளிக்கின்றேன்.

கிராம அலுவரின் பெயர்: கையொப்பம்:

பதவி முத்திரை:

திகதி :

உப ஆவணம் 02

# <u>தொழில்நுட்பவியல் மற்றும் சுஜாதா தியணி புலமைப் பரிசில் திட்டம் - 2024/2026</u>

## தெரிவு செய்வதற்கான நியதிகள்

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் தகுதி பெற்று, க.பொ.த (உயர் தரம்) தொழில்நுட்பவியல் பாடத்துறையைக் கற்கும் **மாணவ, மாணவிகளாக** இருத்தல் வேண்டும்

(**க.கொ**: சுஜாத தியணி புலமைப் பரிசிலுக்கு மாணவிகள் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுவர்.)

03. விண்ணப்பங்கள் கோரப்படும் ஆண்டின் ஜூலை மாதம் 31 ஆம் திகதியன்று வயது 16 க்குக் குறையாமலும் 18 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
04. குடும்பத்தின் வருடாந்த வருமானம் ரூபா 360,000/- அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும். (சமுர்த்தி உதவித்தொகைக் கொடுப்பனவுகள் இவ்வரையறைக்குள் கணக்கிடப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க.)

### தொழில்நுட்பவியல் புலமைப் பரிசில்

*ஒரு மாவட்டத்திலிருந்து 28 மாணவ மாணவிகள் வீதம் தெரிவு செய்யப்படுவர்.

### சுஜாத தியணி புலமைப் பரிசில்

*ஒரு மாவட்டத்திலிருந்து 10 மாணவிகள் வீதம் தெரிவு செய்யப்படுவர்.

## புள்ளி வழங்கல் திட்டம்

| <u>சித்தி</u> | | <u>வழங்கப்படும் புள்ளிகள்</u> |
|---|---|---|
| விசேட திறமைச் சித்தி | (A) | 10 |
| அதி திறமைச் சித்தி | (B) | 08 |
| திறமைச் சித்தி | (C) | 06 |
| சாதாரண சித்தி | (S) | 04 |

(ஆகக்கூடிய புள்ளிகள் *90* ஆகும்.)

உப ஆணம் 03

## புலமைப்பரிசில் - தொழில்நுட்பவிய/ சுஜாத தியணி
(அவசியமற்றவற்றை வெட்டி விடுக.)

## தகுதி பெறும் மாணவர் பட்டியல்

மாகாணம் -................................                                        மாவட்டம் - ....................

| தொடர் இல | பெயர் | பாடசாலை | தொலைபேசி இல. | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |